# விமரிசையாக ஈழநாதம் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

ஈழநாதம் முதலாவது ஆண்டுவிழா யாழ். இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று வெகுவிமரிசையாக இடம்பெற்றது. விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், உயர் அதிகாரிகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றினர். மாலை இரண்டு மணியளவில் ஆரம்பித்த ஆண்டுவிழாவில் முதலாவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பத்திரிகையாளர்கள் பங்குபற்றிய ஆய்வரங்கமும், அதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(லோ)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4·00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02 | பெப்ரவரி | (20 - 02 1991) | புதன்கிழமை | ஓசை 02

## தொழில் வாய்ப்பு வழங்க நாட் நிறுவனம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தில் தொழிலின்றி அல்லற்படும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தமிழீழ ஆய்வு நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்காக தமிழீழத்தின் இயற்கை வளமான பனைவளத்தினை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலமாக புதிய பயிற்சித் திட்டம் ஒன்றை மேற்படி நிறுவனம் நடைமுறைப்படுத்த உள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ இழப்பை குறைக்க நடவடிக்கை எடுக்கவும்

## ‘டெய்லி நியூஸ்’ அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

இராணுவத்திற்கு பெருமளவில் ஏற்பட்டுவரும் உயிர் இழப்பைக் குறைக்குமாறும், இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணுமாறும் தென்னிலங்கைப் பத்திரிகைகள் சிறிலங்கா அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னார் கொண்டச்சிப் பகுதியில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பலத்த இழப்பைத் தொடர்ந்து, சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்படும் இழப்பைக் குறைக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று அரச சார்பு ஏரிக்கரைப் பத்திரிகையான டெய்லி நியூஸ் கருத்து வெளியிட்டு உள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கஸ்ரோ பற்றி சில குறிப்புகள்

(நமது நிருபர்)

அம்பாறையில் படகு விபத்தின்போது மரணமடைந்த அம்பாறை மாவட்ட அரசியல்பொறுப்பாளர் மேஜர்

(4ஆம் பக்கம் பார்க்க)

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில்

## இந்திய மக்கள் பிரச்சினையை விசாரிக்க நிர்வாகசபை குழு

(திருச்சி)

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்சினையை பரிசீலிக்க சிறிலங்கா அரசாங்கம் நிர்வாகக் குழு ஒன்றை அமைக்க உள்ளது.

சென்னை சென்றுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வி. சி. சுக்ளாவின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலியில் குண்டு வீச்சு வீடுகள் பல சேதமடைந்தன

(செ. த. மை.)

நீர்வேலிப் பகுதியில், இன்று முற்பகல் இரு தடவைகள் இரு போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதலைமேற்கொண்டன. இத் தாக்குதலின் போது 7 குண்டுகள் வீசப்பட்ட போதிலும் ஒரு குண்டு வெடிக்கவில்லை நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையை நோக்கி 3 குண்டுகள் வீசப்பட்டன.

டாக்டர் ஆழ்வாப்பிள்ளை, சின்னத்துரை சிவலிங்கம், இளைப்பாறிய கிராமசேவை அலுவலர் செ. வரத்தினம் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன. போர் விமானங்களின் இரைச்சல் சத்தம் கேட்டதும் இப் பகுதி மக்கள் பதுங்கு குழிகளுக்குள் பாது

(4ஆம் பக்கம் பார்க்க)

## ‘நாம்கேட்பது எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதே’

### அன்னையர் முன்னணி கோரிக்கை

அரசிடம் ஒன்றையும் பெரிதாகக் கேட்கவில்லை. எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? எனது கணவர் எங்கே? என எங்களுக்கு உண்மையைச் சொல்லுங்கள்; அவர்கள் இறந்துவிட்டால் சுய மரியாதையுடன் கண்ணீர் சிந்துவோம். உயிருடன் இருந்தால் தேடுதல் செய்கிறோம். இதுதான் எங்களின் கோரிக்கை.

நாங்கள் துன்பத்தில் ஒன்றாக இணைந்துள்ளோம். ஒருவரையொருவர் தேற்றிக் கொள்கிறோம். சுமார் நாற்பதாயிரத்துக்கும் அதிகமான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டு வீச்சால் உருத்திரபுரத்தில் பெண் காயம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் மேற்கொண்டதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். வீடு ஒன்றும் முற்றாகச் சேதமடைந்தது.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் இச் சம்பவம் நிகழ்ந்தது. 8ஆம் வாய்க்கால் பகுதியில் விழுந்த நான்கு குண்டுகளில் ஒன்றிலேயே இந்தப் பெண் காயமடைந்தார். (மு)

## வீரவணக்கம்

### மேஜர் கஸ்ரோ ஜெனிஸ்

(யாழ்ப்பாணம்)

அம்பாறையில் கடந்தமாதம் பதினாறாம் திகதியன்று படகில் சென்றுகொண்டிருந்தபோது படகு நீரில் மூழ்கியதில் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் கஸ்ரோ (மயில்வாகனம் பூபானந்தராஜா பொத்துவில்), ஜெனிஸ். (சீனித்தம்பி சுவேந்திரராஜா பொத்துவில்)ஆகிய இரு போராளிகள் அவ் விபத்தில்மரணமடைந்துள்ளார்கள் இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்(மு

## தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் மே வரை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வட, கிழக்கு மாகாணங்களில் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குவது இவ்வாண்டு மேமாதம் வரை பின்போடப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வட, கிழக்கின் கல்விப்பணிப்பாளர்கள் கலந்து கொண்ட விசேட ஆலோசனைக் கூட்டத்தில் கல்விச் சேவைகள் ஆணைக்குழுத்

4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை தாக்குதலால் மீனவர் காயம்; படகு சேதம்

நேற்றுக் காலை 6.15க்கு பொலிகண்டி கடற் பிரதேசத்தில் மீன் பிடித்துக்கொண்டு நின்ற மீனவர் மீது கடற்படையினர் தாக்கியதில் பலாலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வந்து சக்கோட்டையில் வசித்துவரும் திரு. பா. தங்கன் (வயது 25) காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதே சம்பவத்தில் வளலாய்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து அல்வாய் மேற்கில் வசித்துவரும் சி. இல்பேட் (வயது 52) மற்றும் ஆலடியைச் சேர்ந்த சித்தப்பா மாம்பழம் என அழைக்கப்படும் அமிர்தலிங்கம் (வயது 35)

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரபல வர்த்தகர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகர் ஒருவர் நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலவச பாடநூல் விநியோகம் 22 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப் பாடநூல் விநியோகம் இத் தினத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நன்றி

மக்கள் தினசரி ஈழநாதத்தின் ஓராண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றமைக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும், இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தவர்களுக்கும் ஈழநாதத்தின் சார்பில் நன்றி நவில்கின்றோம். மேலும் கடந்த ஓராண்டுகாலமாக ஈழநாதம் தொடர்ந்து வெளிவர ஒத்துழைப்பும், ஊக்கமும், ஆதரவும் நல்கிய வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

-ஆ-ர்.

# முதலாண்டை நிறைவு செய்யும் ஈழநாதத்திற்கு வாழ்த்துக்கள்!

## • இன்டோ சைனீஸ் ரெஸ்டோரண்ட் •

சிறந்த சைனீஸ் உணவு வகைகள்
ஓடர்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.

111/4, மடம் வீதி, யாழ்ப்பாணம்.

(காலை 9-00 - இரவு 9-00 மணி, மின்சார வசதியுடன் திறந்திருக்கும்)

(B-2036)

### வரி விளம்பரம்

**நியு பெஸ்ரோன் எலக்ரோனிக் ஷோப்**

ரி.வி., டெக், றேடியோ, மணிக்கூடு றிவைண்டிங் மற்றும் எல்லா விதமான மின்சார உபகரணங்களும் திருத்து பவர்களும் விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில் படப்பிடிப்பாளர்களும புதிய பழைய பாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும் இலக்கம் 741. மானிப்பாய் வீதி, ஆலடிச் சந்தி யாழ்ப்பாணம்.

(B-1893

**விற்பனைக்கு**

துரிதமான சிக்கன சலவைக்கு மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap விளக்கெரிக்க வேப்பெண்ணை தாவடி சந்தி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்திலும் விற்பனையாகிறது. (B-2039)

மஹாகவியின் கோடை - நாடகம் விலை ரூபா 30/- வெளியீடு விற்பனை பூபால சிங்கம் புத்தகசாலை.

(B-2029)

### 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## 2 ஆம் லெப். ஜேசு (முருகேசு மகேந்திரன்)



தாய் மடியில் 28.09.1967 — தாய்மண்ணுக்காக 23.11.1990

வையக மக்களை வாட்டும்சுமை தீர்க்க
வையமீதில் வந்துதித்த யேசுபிரான்போல
சிலுவை சுமந்தாய்! தமிழின மீட்சிக்காய்!-உன்
வலுவைக் காட்டி வரலாறு ஆனாய்
இந்தமண் உள்ளவரை, உன்நாமம் வாழும்

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் நண்பர்களின், இயக்கத் தோழர்கள், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகேந்திரன் வீதி,
அராலி வடக்கு.

பெற்றோர், சகோதரர்கள்.

(R- 1123)

### யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்

## மாணவர் அனுமதி - 1991

ஆண்டு 6, 7, 8, க.பொ.த. ப. (உ. த) கலை, வர்த்தகம் - வகுப்புக்களில் மட்டும் சில வெற்றிடங்கள் உண்டு.

22-02-1991 வரை விண்ணப்பங்கள் நேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

28-02-1991-ன் பின்னர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

அதிபர்

யா/வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

(B-2024)

### சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் நவீல்ட் பாடசாலையில் கடந்த 10 ஆம், 11 ஆம் திகதிகளில் பளை மகா வித்தியாலய சாரணர் குழு சிரமதான பணியை மேற் கொண்டது. காலை 7 30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெற்ற இந்தச் சிரமதானப் பணியில் 32 சாரணர்கள் ஈடுபட்டிருந்தார்கள்.

### தமிழீழ

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் சிங்கள பேரினவாத அரசின் சட்டுப்பாட்டில் இயங்கும் செய்தி, மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் பெரும்பான்மை மக்களையும் தமது கூலிப்படையினரையும் திருப்திப்படுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவது தெரிந்ததே. எனவே இவற்றை நம்பி நாங்கள் சோர்வடையாது உண்மைகளை அறிந்து உற்சாகம் ஏற்படத்தகக வகையில் போராளிகளுடன் பழகுவோம் போராளிகளும் தமது பாசறையில் தகுந்த உளவியல் ரீதியான பயிற்சியைப் பெறுவது முக்கியமானதாகும். இதனால் போராளிகளுக்கிடையே புரிந்துணர்வு ஏற்படுவதோடு எந்த கடினமான சூழ்நிலையையும் எதிர்நோக்கக்கூடிய மனத் தெம்பு உருவாகும். மேலும் நமது பிரதேசத்தில் வாழும் உளவள ஆலோசகர்கள் தற்கால சூழ்நிலையால் உளவியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளானவர்களுக்குத் தமது தன்னலமற்ற சேவையினால் தகுந்த நிவாரணம், அதாவது உளவியல் ரீதியான ஆலோசனைகளுடனான சிகிச்சை அளிக்க முன்வரவேண்டும்;

### 90ஆம நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 09 – 02 – 1963

தாயக மீட்பில் 23 – 11 – 1990

மாங்குள இராணுவ முகாம் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

## 2ஆம் லெப். மாரியாச்சி (சிந்தனா குணசிங்கம்)

சிந்தனா நீ சாவைவென்று
சரித்திரம் படைத்தாய்!
உணவை மறந்து
உறக்கத்தை மறந்தாய்! — ஆனால்
உணர்வை மறவாத வீரவேங்கை
நீ சிந்திய இரத்தத் துளிகள்
புதிய வரலாற்றை எழுதும புதுமைத் துளிகள்!

— நண்பிகள்

(B-2038)



## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 20

1986 ஆம் ஆண்டு பாலமுனையில் இடம் பெற்ற முற்றுகையின் போது சயனைற் அருந்தி வீரமரணமடைந்த

**சங்கரப்பிள்ளை அருட்செல்வம்** (மண்டூர்)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமடைந்த

**சுரேன்** (தி. சுரேந்திரன் - தாயன்மார்க்கட்டு)

1991 ஆம் ஆண்டு போர் நிறுத்தம் அமுலில் இருந்தவேளையில் மல்வத்தையில் சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்ய முயன்ற போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**2 ஆம் லெப். தாரணி** (இ. காந்தலிங்கம் இராஸ்)

உங்களின் கனவுகள்
இந்த மண்ணில்
நிலையான வரலாறாய்
எழுதப்படும் வரையில்
இல்லை எமக்கு ஓய்வு
என்பதால் நீங்கள் நிம்மதியடையலாம்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2037)

### ❁ சிந்தனைக்கு ❁

மிகச் சிறந்த குறிக்கோள்களை அடைய, மிகச்சிறந்த சாதனங்களைக் கையாள்வதுதான், விவேகத்தின் அறிகுறி.

—ஃபிரான்சிஸ் ஹச்சிஸன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 20-02-1991

தொலைபேசி

ஆசிரியபீடம் 625 - 2839 நிர்வாகபீடம் 2258

த.பெ.எண் 03


## தாமதத்திற்காக வருந்த வேண்டி வரும்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா விடுதலைப் புலிகளை தோற்கடிக்க சிறிலங்கா இராணுவத்தினருக்கு காலக்கெடு விதித்துள்ளதாகவும் இம் மாதம் ஆகஸ்ட் இராணுவ ரீதியாக இட்டவட்டமான முன்னேற்றத்தை இராணுவத்தினர் காட்டவேண்டும் எனப் பணிக்கப்பட்டிருப்பதாகவும் சிறிலங்காவிற்கான செயலாளர் கிறிஸ் தாம்பர் பொறியை ஆதாரம் காட்டி பி.பி.ஸி. செய்தி வெளியிட்டது.

மேலும், அச் செய்தியில், இராணுவத் தளபதியின் வேண்டுகோளுக்கிணங்க இந்த காலக்கெடு பிரேமதாஸாவினால் இராணுவத்தளபதிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை அடக்குவதற்கு காலக்கெடு விதிக்கும் காலக்கெடு சூழ்ச்சியும் பழமையான விடயமில்லை. 1978இல் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சித் தலைவராக இருந்தபோது இந்தக் காலக்கெடு பட்டியை ஆரம்பமாகியது. அது இதுவரை தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் போராட்டம் அன்றிலிருந்து விஸ்தரிக்கப்பட்டு வளர்ந்து கொண்டே போகின்றது. 1978இல் காலக்கெடு விதிக்கப்பட்ட போது சில பத்து எண்ணிக்கையில் இருந்த போராளிகள் இன்று பல ஆயிரமாக வளர்ச்சி அடைந்தது தான் நிதர்சனமான உண்மை.

ஆரம்பத்தில் அரசியல்வாதிகளே சிறிலங்கா இராணுவத்தினருக்குக் காலக்கெடு கொடுத்து வந்தார்கள். இன்று நிலைமை சற்றுமாறி இராணுவத்தினரே காலக்கெடு விதிப்பவர்களாகவும், காலக்கெடு கேட்பவர்களாகவும் இருந்து வருகின்றார்கள்.

இந்தமுறை யுத்தம் தொடங்கியதில் இருந்து சிறிலங்கா தேசியபாதுகாப்பு இணை அமைச்சர் சில வாரங்கள் என காலக்கெடுவை தொடர்ச்சியாக விதித்து வந்தார். அதன் பின்னர் இராணுவத்தளபதி ஹமில்டன் வணசிங்கா ஆறுமாதத்திற்குள் காலக்கெடு விதித்தார். வவுனியாத் தளபதியும் தமது ரக்கிற்கு மூன்று ஒரு மாதங்கள் என காலக்கெடு விதித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினர் காலக்கெடுக்களை விதிப்பதற்கு அண்மையில் அவர்களுக்கு சீனாவிடம் இருந்து வந்துசேர்ந்த புதிய ரக ஆயுதங்கள் தமக்கு பக்க பலமாக உள்ளதாக எண்ணுகின்றார்கள் போலும்.

ஆனால், புலிகளுக்கெதிரான காலக்கெடு விதித்து ஆரம்பிக்கப்பட்ட யுத்தங்கள் எவையும் வெற்றி பெறவில்லை என்பதை சிறிலங்கா அரசியல், இராணுவத் தலைவர்கள் இன்னும் மனம் கொள்ள மறுக்கின்றதை விட்டால் அதைவிட்டு நாம் கவலை அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

நீண்டகால வரலாறு வேண்டாம்: கடந்த ஆறுமாத காலத்தில் கிழக்கில் புலிகளை அடக்கி விட்டோம் என மார்பு தட்டிக் கொண்டு இருக்கும் வேளையில் தினசரி பத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் தாக்குதல்களுக்கு பலியாவதில் இருந்தே இராணுவ ரீதியான வெற்றியின் அவர்களது மதிப்பீட்டின் தவறுதலானவை என்பதை உணரலாம்.

இன்று சீனாவிடம் இருந்து பெற்ற ஆயுதங்களைக் கொண்டு விடுதலைப் புலிகளை குறிப்பிட்ட கால பகுதியில் அழிக்கு விடலாம், அதன் பின்னர் தாம் விரும்பியதைப் புலிகள் மீது திணிக்கலாம் என சிறிலங்கா அரசும் திருப்திப்படக் கனவாகவே முடியும். ஏனெனில் விடுதலைப் புலிகள் எப்பொழுதாவது நிர்ப்பந்தங்களுக்கும் பணிந்து எதற்கும் அவர்கள் விட்டுக் கொடுத்ததாக இல்லை. அவ்வாறு பணிவதாக இருந்தால் இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் தேசிய சக்தியாக வளர்ந்திருக்க முடியாது.

இன்னொன்று விடுதலைப்புலிகள் சீன தயாரிப்பு ஆயுதங்களைக் கண்டு பயந்துவிடுவார்கள் என்றும் சிறிலங்கா எண்ணிவிடக் கூடாது ஏனெனில் உலகில் இன்று இரண்டாவது எனக் கருதப்படும் சோவியத் தயாரிப்பு ரி-72 ரக டாங்கிகளுக்கும் எம். ஐ. 25 ரக ஹெலிகொப்டர்களுக்கும் எதிராகப் போரிட்டவர்கள் புலிகள்.

இன்று வளைகுடாவில் அமெரிக்காவின் நவீன எம் 1 ஏ 1 ரக டாங்கிகளை எதிர்த்துப் போராடக்கூடியதாக வைத்திருப்பவை இவ் ரி-72 டாங்கிகளும், எம்.ஐ. 25 ரக ஹெலிகொப்டர்களும் தான்.

இந்நிலையில் காலக்கெடுக்கள் மூலம் இராணுவ வெற்றியை எதிர்பார்த்து புலிகள் வழங்கிய சந்தர்ப்பத்தை தவறவிட்டமைக்காக எதிர்காலத்தில் சிறிலங்கா ஜனாதிபதி கவலைப்படவேண்டி வரலாம்.

போர்க்கால சிந்தனை

# தமிழீழ விடுதலைப் போராட்டம்

## ஓர் உளவியல்ரீதியான கண்ணோட்டம்

ஒடுக்கப்பட்ட ஒரு மக்களினம் உரிமை வாழ்வுக்காக போராடுவது இயற்கையின் நியதியே இது வரலாறு நமக்குப் புலப்படுத்தும் பேருண்மை. இந்த வகையில், பொதுவான மொழி, பண்பாடு கலை கலாசாரம், வரையறுக்கப்பட்ட பிரதேசம், பொருளாதாரம் ஆகியவற்றைக்கொண்ட தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது ஒரு வரலாற்றுக் கட்டாயமாகிவிட்டது ஒரு தேசிய விடுதலை அமைப்பானது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும்போது அது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

1. சரியான தத்துவம்
2. ஆயுதபலம்
3. மக்கள்சக்தி.

இந்த அம்சங்களில் முதலிரண்டையும் கருதிற் கொள்ளும்போது கடந்த 15 வருட கால ஆயுதப் போராட்ட வரலாற்றில் சரியான - சாத்தியமான நெறிமுறைகளைக் கையாண்டு போதிய ஆயுதபலத்துடன் சிறிதும் உறுதி குலையாது, இலட்சியப் பற்றுடன் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே எமது போராட்டத்திற்கு தலைமையேற்பதற்குத் தகுதியானதே.

அடுத்து, மக்கள் சக்தி என்பது குறித்த தேசியவிடுதலை அமைப்பிற்கு இருக்கும் வெகுஜன ஆதரவு என்பதிலும் பார்க்க தேசிய விடுதலைப் போராட்டத்தில் மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பு என்பதால் குறிக்கப்படலாம். மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பு, மக்களின் மனோநிலை- உளவியல் ரீதியாக மக்கள் பாதிக்கப்படும் அளவு ஆகியவற்றில் தங்கியுள்ளது காலங்காலமாக காலனித்துவ ஆட்சிகளின் கீழ் உரிமைகளைத் தட்டிக்கேட்காது சலுகைகளுக்காக ஏங்கிக் கொண்டிருந்த இனம் இன்று உரிமைகளுடன் வாழ்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது உள்ளத் துணிச்சலைக் கொண்டிருப்பது - வளர்த்துக் கொள்வது அவசியமாகிறது.

''அச்சம் உள்ளடக்கி அறிவு அகத்து இல்லாக் கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி எச்சம் அற்று ஏமாந்து இருக்கைநன்றே''

''பயந்தாங் கொள்ளியாயும், புத்தியில்லாமலும் இருக்கும் பிள்ளைகளைப் பெறுவதைக் காட்டிலும் அக்குடும்பத்தினர் பிள்ளைப்பேறு இல்லாது வாழ்வது நன்று' என்று பொருள் தரும் இக்கூற்று வெற்றி வேற்கையில் அதிவீரராம பாண்டியனுடையது. வீரமுள்ள இனம் தமிழ் சமுதாயமொன்றை உருவாக்குவதில் பெற்றோர் அக்கறை கொள்ளவேண்டும்.

நமது தேச விடுதலைக்காகத் தமது பசுமை பிள்ளைகளைப் புலிகளிடம் கையளித்துப் போர்க்களம் அனுப்புகிறாள் இன்றைய தமிழ்த் தாய். பாசத்தை வீரத்தால் வென்ற இவ் வீரத்தாய் அச்சத்திற்கும், அறியாமைக்கும் அநீதிக்கும், அகந்தைக்கும் அடிமையாகி வாழும் பெண்களுக்கு மட்டுமல்ல அடிமை நிலையில் வாழும் ஆண்களுக்கும் ஓர் அரிய பாடமாய் விளங்குகிறாள்.

''வேப்பமர உச்சியில் நின்று
பேய் ஒன்று ஆடுதென்று
விளையாடப் போகும்
போது சொல்லி
வைப்பாங்க-உன்
வீரத்தை முளையிலேகிள்ளி
வைப்பாங்க
வேலையற்ற வீணர்களின்
மூளையற்றவார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட
நம்பி விடாதே''

என்று அறிவுறுத்துகிறார் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்.

''கொலை வாளினை
எடடா - மிகு
கொடியோர் செயல்
அறவே''

என வீர முழக்கமிடுகிறார் பாரதிதாசன். ''உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!''

என முழங்குகிறார் பாரதியார் இவ்வாறு உள்ளங்களில் அச்சத்தை விலக்கி வீரத்தை விதைத்துச் சென்றார்கள் கவிஞர்கள். ''பயம் ஒன்றுக்குத்தான் மனிதன் பயப்பட வேண்டும் வேறெதற்குமல்ல'' என்ற விவேகானந்தரின் கூற்றை ஏற்றுத் தேவையற்ற பய உணர்ச்சிகளை உள்ளங்களினின்று அகற்றி வாழ்வோம்.

பாதுகாப்பு, பாதுகாப்பு என அலறுகிறார்கள் என்கிறார்கள் மனோதத்துவ வியலாளர்கள் ஏனெனில் மனித மனம் பயத்தால் கட்டுப்பட்டிருக்கும் வரை எந்தப் பெரிய காரியத்தையும் செய்யமுடியாது என்று அச்சமின்றி வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறார் Dr M S உதயமூர்த்தி அநாவசியமாகப் பயந்து ஒழிந்துவாழு பொழுது எமது மனோசக்தியை வீணாக விரயமாக்குகின்றோம்.

### உஷா ரவீந்திரன்

யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

எனவே இப்போராட்ட காலத்தில் வீணான அச்சத்தை முறியடித்து ஆக்கபூர்வமான முறையில் போராட்டத்தில் எமது பங்களிப்பை செய்ய;

(i) எதனைக் கொண்டு அச்சம் கொண்டோமோ அதனையே செய்ய ஆரம்பிப்போம். நாம் எதனைச் செய்ய இயலாது என்று அஞ்சினோமோ அதுவே தொடர்ச்சியான முயற்சியின் பின்னர் இலகுவாகத் தோன்றும், காலப்போக்கில் எமது பயமான எண்ணங்கள் பயனற்றவை. எமது ஆற்றலோடு தொடர்பில்லாதவை என்பது புரியும். உதாரணமாகப் போர்க்களத்துக்கு செல்ல அஞ்சுபவன் ஊர்காவல் பிரிவினருடன் ஆரம்பத்தில் 'சென்றி'யில் நின்று பழக வேண்டும்.

(ii) ''எதிர் நீச்சல் போடுவோம்'' ''எனக்கு நிகர் நானே'' என்ற ரீதியில் எமது தனித்துவத்தை ஏற்று மனித ஆளுமையை வளர்த்து எந்தப் பெரிய பயங்கரமான சூழ்நிலையையும் எதிர்த்து சவால் போடக் கற்றுக்கொள்வோம் கோழை என்பவன் நாளாந்தம் இறந்து கொண்டிருப்பவனே. அவனுக்கு சாவு என்பது ஏற்கனவே ஆரம்பித்துவிட்ட ஒன்று.

(111) உள்ளத்தில் துணிச்சலான சிந்தனைகளை வளர்ப்போம். நடக்காதவற்றை நடப்பதாக கற்பனை செய்து கலக்க முறுவதை விடுத்து திண்ணிய உள்ளத்தோடு தெளிந்த நல் அறிவோடு செயற்படுவோம் உதாரணமாக பதுங்கு குழிக்குள் குண்டு வந்து வீழ்ந்தால் என்ன செய்வது? உறங்கும் போது ஷெல் வந்து வீழ்ந்தால் என்ன செய்வது? என்று நாள் தோறும் எண்ணி பய உணர்ச்சிகளால் பந்தாடப் படுவதிலிருந்து விடுபட முனைவோம் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட எமது மக்களுடன் இயந்திரப் படகு ஒன்று கடற்படை முகாமை நோக்கி விரைகிறது ஆயுதம் தாங்கிய கடற்படை வீரனின் காவலுடன். திடீரென அப் படகில் பயணம் செய்த இரு இளைஞர்களால் அவ்வீரனின் ஆயுதம் பறிக்கப்படுகிறது பின்னர் அக்கடற்படை வீரன் கொல்லப்படுகிறான். படகிலிருந்தவர்கள் பாதுகாப்பாக கரைக்கு கொணரப்படுகிறார்கள். அவ்வாயுதம் புலிகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. இச் சம்பவம் துணிச்சலான சிந்தனைகளை தமது உள்ளங்களில் வளர்த்த இளைஞர்களின் செய்கை எவ்வாறு அமையும் என்பதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு.

உள்ளச் சுமைகளைக் களைவோம். சென்று விட்ட சுமைகளால் எம் நினைவுகளைச் சுமைப்படுத்தாதிருப்போம் என்கிறார் ஷேக்ஸ்பியர். எனவே எமது போராட்டத்தில் ஏற்பட்ட தற்காலிகமான இழப்புக்கள் பின்னடைவுகளைப் பற்றிய நினைவுகளை மன மகிழ்ச்சி தரக்கூடிய நினைவுகளால் நிரப்புவோம்.

நிகழ்காலத்தில் நடமாடுவோம் ''எதிர்காலத்தை நம்பாதே; அங்கே உன் கனவுகள் பலிக்கும் என்பது நிச்சயமல்ல. இறந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே; அது வந்துவிட்டது. நிகழ்காலம் தான் உயிருள்ளது. இக்காலத்தின் மீது தான் உன் கவனம் இருக்க வேண்டும்'' என்று விளம்புகிறார் லாங்பெல்லோ. எனவே இறந்த காலக்கவலைகளோ அன்றேல் எதிர்கால ஏக்கங்களோ எமது நிகழ்காலப் போராட்டத்தை நீறுபூத்ததாக மாற்றாதிருக்கப் பார்த்துக்கொள்வோம். நிரந்தரமாக வாழ்வோம்.

எமது சூழ்நிலைக்கேற்ப உள்ளத்தை இசைவுபடுத்தி எப்பொழுதும் உறுதியான சிந்தனைகளை உள்ளத்தில் வளர்ப்போம். எதிலும் மனம் தளராது எல்லா வகைப் பிரச்சினைகளுக்கும் சரியான முறையில் ஈடுகொடுத்து வாழ்வோம். அமெரிக்காவில் ஒரு இளம் தம்பதியினர்; கணவன் கலிபோர்னியாவிலுள்ள இராணுவ பாசறைக்கு தன் கடமையின் நிமித்தம் தன் சொந்த ஊரிலிருந்து செல்கிறான். மனைவியும் கணவனின் அருகில் வசிப்பதற்காக அப்பாசறைக்கு அருகில் ஓரிடத்தில் வாழத்தொடங்குகிறாள்; ஆனால் அப்பிரதேசத்தின் அதி கூடிய வெப்பமும் வறட்சியும் தனிமையுணர்வும் அவளது உள்ளத்தில் சலிப்பையும் சோர்வையும் ஏற்படுத்துகின்றன. இதுபற்றி அந்த இளம் மனைவி தன் தந்தைக்கு எழுதுகிறாள் தந்தையின் பதிலில் இருந்த இருவரிகள் ''இரு மனிதர்கள் சிறைக் கம்பியூடு வெளியே நோக்கினார்கள். ஒருவன் சேற்றைக் கண்டான் மற்றவன் வெறுமையைக் கண்டான்''

அவளே அச்சூழலுக்கு ஏற்றவாறு அவளின் வாழ்க்கை மாற்றியமைக்கத் தூண்டுகோலாய் அமைந்தன.

எனவே நாமும் போராட்டத்திலிருந்து எம்மை ஒதுக்கிக் கொள்ளாது (அதாவது இந்தியாவை நோக்கிச் செல்வதன் மூலமோ கொழும்பை நோக்கிச் செல்வதன் மூலமோ எமது பிரச்சினைகள் தீரப் போவதில்லை) இப்போர்க்கால சூழ்நிலைக்கேற்ப எமது மனதை மாற்றி வசதிகளை சுருக்கி சுயஉதவி முயற்சிகளில் ஈடுபட்டு எமது வாழ்வை புதுக்கி அமைப்போம்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கின் பதில் வரும் வரை தரைத்தாக்குதல் வேண்டாம்

## சோவியத் தூதுவர் கோரிக்கை

(மொஸ்கோ)

சோவியத்யூனியன் முன் வைத்துள்ள சமாதானத் திட் டத்திற்கான உத்தியோக பூர்வ பதிலை ஈராக் தெரி விக்கும் வரை தரை மார்க்க தாக்குதலை நடத்த வேண் டாமென அமெரிக்க தலைமை யிலான கூட்டுப் படைகளிடம் சோவியத் விசேட தூதுவர் பிறிமக்கோவ் கேட்டுள்ளார்.

இதனிடையில் சோவியத் அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு ஈராக்வெளியு றவு அமைச்சர் தாரிக் அஸீஸ் தெஹிரான் சென்றுள்ளார். அங்கு அவர் ஈரானிய அதிபர் ஜப்சன் ஞானியைச் சந்தித்துப் பேசினார்.

தற்போதும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் சோவி யத்தின் சமாதான யோசனை கள் தொடர்பாக பிரிட்டனின் போர்க்கால மந்திரி சபையும், லக்சம் பேர்க்கில் கூடியிருக் கும் ஐரோப்பிய பொருளா தார சமூக நாடுகளும் ஆராய் ந்து வருகின்றன. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும் தமது பாதுகாப்பு ஆலோச கர்களுடன் ஆலோசனை நடாத்தி வருகின்றார்.

இவை இப்படியிருக்க கூட் டுப்படை விமானங்கள் கடந்த ஆறு நாட்களாக ஓய்ந்திருந்த தாக்குதலை நேற்று முன் தினம் முதல் மீண்டும்தீவிரப் படுத்தி யுள்ளன. பக்தாத்தின் மையப் பகுதிகளில் சுமார் ஐந்தரை மணி நேரத்திற்கும் மேலாக குண்டுமாரி பொழியப்பட்ட தாக அங்கிருந்து வரும் செய் திகள் கூறுகின்றன. தரைப் போர் தொடங்குவதற்கும் கூட்டுப்படைகள் திகதிகுறித்து இருப்பதாகச் செய்திகள் கூறு கின்றனர்.

## தாரிக் அசிஸ் மீண்டும் மொஸ்கோ செல்கின்றார்

மொஸ்கோ சென்று திரும் பிய ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அசிஸ் நேற் றிரவு மீண்டும் மொஸ்கோ திரும்பியுள்ளார்.

கடந்த ஞாயிறு மொஸ்கோ சென்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவின் சமாதானத் திட்டத்துடன் தெஹ்ரான் ஊடாக பாக்தாத் திரும்பிய தாரிக் அசிஸ் ஈராக் ஜனாதி பதியுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு நேற்று இரவு மீண்டும் மொஸ்கோ சென்றுள் ளார்.

அதேவேளை தாரிக் அசிஸ் நிபந்தனையற்ற பேச்சுவார் த்தை நடத்த ஈராக் தயாராக இருப்பதாக தெரிவித்ததாக தெஹ்ரான் வானொலி அறி வித்தது.

அதேவேளை 48 மணிநேர யுத்த நிறுத்தத்தை அமெரி க்கா அறிவிக்க வேண்டுமென ஈரான் கோரியுள்ளது.

### கஸ்ரோ பற்றி

கஸ்ரோ 1983 ஆம் ஆண் டிலிருந்துதமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் தொடர்புகளை வைத்திருந்த வர். 1985 ஆம் ஆண்டுஇயக்கத் தின் முழுநேர உறுப்பினரா னார். இயக்கத்தின் முழுநேர உறுப்பினராகியபோது இவ ருக்கு திருமணமாகி ஒரு குழந் தையும் இருந்தது, கல்முனை தொலைத்தொடர்புநிலையத் தில் கடமையாற்றிய இவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தில்பயிற்சி முடிந்ததும் தொ லைத்தொடர்பும் பணிகளில் ஈடுபட்டிருந்தவர், இவர் பொ த்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

### இராணுவ

அதேவேளை இந்தப் பிரச் சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக அரசியற் தீர்வுகாண முயற்சிக்குமாறு பல தென்னி லங்கைப் பத்திரிகைகள் அர சைக் கேட்டுக்கொண்டுள்ளன.

### இலவச

வது:

மிகுதிப் பாடநூல்கள் அடுத்து இங்கு வர இருக்கும் 'லில்லி' என்ற கப்பல் மூலம் எடுத்து வரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

### கடற்படை

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி சி. கதிரமலை (வயது 30) ஆகியோரின் வெளி இணைப்பு இயந்திரங் கள் கடற்படையினரால் கட லில் வீசி எறியப்பட்டன. இவற்றுடன் ஆலடியைச் சேர்ந்த நா. இராமச்சந்திர னின் படகும் சேதமாக்கப் பட்டுள்ளது இதனால் மீன வர் பெரிதும் பீதியடைந்துள் ளனர். (செ. த. மை)

### நீர்வேலியில்

காப்பைத் தேடிக்கொண்ட தால் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.

கண்ணாடித் தொழிற் சாலை மீது கடந்த 90 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளிலும் 91 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதியும் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட் டதும் இதனால் கட்டடங் கள் வாகனங்கள் சேதமடைந் ததும் தெரிந்ததே (85)

### தொழில் வாய்ப்பு

மூன்றுமாத பயிற்சிக் காலத் தின் போது பயிலுநர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங் கப்படும். பயிற்சி நிறைவேறி யதும் 3000 ரூபா முதல் 9000 ரூபாவரை வருமானம் ஈட்டத் தக்க சுயதொழில் வாய்ப்பு வழங்கப்படும் எனவும்இத்திட் டத்தின் மூலம் பயிற்சிபெற விரும்புவோர் தமது பெயர் களை தம்மிடமோ அல்லது கிராமிய உற்பத்திக் குழுப்பிர தேசக் காரியாலங்களிலோ பதிவு செய்து கொள்ளுமாறும் தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட் டுள்ளது. (மு)

## மயிலிட்டி வைத்தியசாலை ஊழியர்களின் அவதி

(செ. த. மை,)

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையில் கடமை யாற்றிய ஊழியர்களுக்கு, 90 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட சம்பள உயர்வு இதுவரை கிடைக்கவில்லை என்று தெரி விக்கப்படுகின்றது

இந்த வைத்தியசாலையின் தலைமையகம் கொழும்பில் இருப்பதால், ஊழியர்கள் பலர் அங்கு செல்வது குறித்து கவலை தெரிவிக்கின்றனர். அதே சமயம் டாக்டர் ஒரு வரும், சுதிர் பகுதி இயக்குநர் ஒருவரும் கொழும்பு சென்று தங்கள் சம்பள உயர்வுப் பணத்தைப் பெற்றுவிட்டார் களாம். அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு, அண்மையில் யுத்த நிவாரணம் வழங்கப்பட்டுள்ள போதிலும், இந்த ஆஸ்பத்திரியில் கடமை யாற்றிய 39 ஊழியர்களுக் கும் இந்த நிவாரணக் கொடுப் பனவுகள் கூட வழங்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது. மேலும் ஊழியர் களின் செயல்பாடு விபரங் கள், லீவு பெறுவது போன் றவை மேலிடத்துக்கு அனுப்பி வைப்பதில் தடங்கல் ஏற்பட் டுள்ளதாகவும், கடந்த மார்கழி, தை மாதங்களுக்கு ரிய சம்பளம் இதுவரைக் கிடைக்கவில்லை என்றும் ஊழியர்கள் தெரிவிக்கின்ற னர்.

### நாம் கேட்பது

எண்ணிக்கையைக் கொண்ட காணாமற் போனவர்களின் பட்டியல் வைத்திருக்கிறோம். இப்படி உணர்ச்சிபூர்வமாகப் பேசினார் திருமதி மனோகரி சரவணமுத்து. இவர் படு கொலை செய்யப்பட்ட பத் திரிகையாளர் றிச்சர்ட் டீ சொய்ஸாவின் தாயராவர்.

தென்னிலங்கைப் பகுதியில் 1989 இல் அரச படையினரா லும், ஏனைய ஆயுதம் தாங் கிய அரச சார்புப் படைகளா லும் கைதாகிக் காணாமல் போனவர்களாகக்கருதப்படும் சுமார் ஐம்பதாயிரம் பேரின் தாய்மாரும், உறவினரும் ஸ்தா பித்த அன்னையர் முன்னணி யின் முதலாவது மாநாடும், பேரணியும் நேற்றுக் கொழும் பில் இடம்பெற்றது

இம்மாநாட்டில் காணாமல் போனவர்கள் பற்றிய உண் மைத்தகவல்களை அரசுவெளி யிடவேண்டுமெனக் கோரப்பட் டுள்ளது. இதில் பலவெளிநாட் டுத் தூதுவர்கள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள். மனித உரி மைக் காப்புக் கழகப் பிரதி நிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை அரசு வெளியிட வேண்டும் எனக்கூட் டத்தில் கலந்துகொண்ட பல ரும் உணர்ச்சிபூர்வமாகப் பேசினர். இம்மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவி சிறி மாவோ பண்டாரநாயக்கா வும் கலந்துகொண்டுள்ளார்.

### இந்திய மக்கள்

இலங்கை விஜயம் இரு நாடு களிடையே இருந்த சில வர்த் தக தடைகளை அகற்ற பெரி தும் உதவியது என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

## கிணற்றில் மூழ்கி மரணம்

(செ. த. மை)

சிறுப்பிட்டி - பன்னாலை யைச் சேர்ந்த சீனித்தம்பி தவமணி (30வயது) வளவுக் கிணற்றில் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார். ஒரு பிள் ளைக்குத் தாயான இவர் பல வருடங்களாக நோய்வாய்ப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

## சமுகமளிக்கவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத் தின் சகல அரசாங்க, கூட்டு ஸ்தாபன திணைக்களங்களி லும் கச்சேரியிலும் சுயவிரும் பத்தின் பேரில் இளைப்பா றிய சகல உத்தியோகஸ்தர் களையும் முக்கிய விடயம் பற்றிக் கலந்தாலோசிக்க இன்று புதன்கிழமை மாலை 2-30 மணிக்கு நல் லூர் சாதனா பாடசாலை யில் சமுகமளிக்குமாறு முல் லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் அறி வித்துள்ளார்.

## இந்தியாவை விடுத்து அமெரிக்காவேறு இடங்களில் எரிபொருள் நிரப்ப ஏற்பாடு

(டில்லி)

அமெரிக்க சார்பு கூட்டணி நாடுகளின் விமானங்களுக்கு இன்று புதன்கிழமை முதல் இந்தியாவில் எரிபொருள் நிரப்பும் வசதி ரத்துச்செய் யப்பட்டுள்ளது. இந்திரா காங் கிரஸ் கட்சியின் நெருக்குத லால் பிரதமர் சந்திரசேகர் அரசு மேற்படி முடிவை மேற் கொண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமெரிக்க விமானங்கள் எரிபொருள் நிரப்ப மாற்று ஏற்பாடுக ளைச் செய்துள்ளமையினால் இந்திய விமான தளங்களுக்கு அவை வளைகுடாவிற்கு செல் லும் வழியிலோ, மீளும் வழி யிலோ வரமாட்டா என்று புது டில்லியில் வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

## தொடர்ந்தும் ஆதரவு

சந்திரசேகரின் அரசுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்க காங்கிரஸ் முடிவுசெய்திருப்ப தாக அக்கட்சியின் தலைவர் ராஜீவ்காந்தி புதுடில்லியில் கூறியுள்ளார். கட்சியின்அகில இந்திய செயற்குழுக் கூட்டத் தில் முடிவு எடுக்கப்பட்ட தாக அவர் செய்தியாளர்க ளிடம் கூறினார்.

## பஸ்சில் குண்டு 8 பயணிகள் பலி

(டில்லி)

புதுடில்லியில் பேரூந்து ஒன் றில் குண்டு வெடித்ததில் எட்டுப் பயணிகள் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் எட் டுப் பேர் காயமடைந்துள் ளனர் எனப் புதுடில்லியில் பொலிஸார் தெரிவித்துள்ள னர். இச் சம்பவத்திற்கு யார் பொறுப்பாளர்கள் என் பது இதுவரை தெரிய வில்லை.

## மின்தறி நெசவு நிலையத்தில் 80,000 ரூபா கொள்ளை

(செ. த. மை)

இந்திய இராணுவ நடவடிக் கையின்போது சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்துக்குச் சொந்தமான மின்தறி நெசவு நிலையத்திலிருந்து 80,000 ரூபா பெறுமதியான பொருள் கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நெசவு நிலையம் இப் பொழுது குத்தகை அடிப் படையில் தனியார்ஒருவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மின் சாரத்தடைகாரணமாகஇயங் காமலிருந்த இந்த நிலையத் தில் கடந்த 90 பெப்ரவரியிலி ருந்து ஜெனரேற்றர் மூலம் உற்பத்தி நடைபெறுகிறது. நெசவு நிலையத்திற்கு வேண் டிய நூல் வகைகள் தல்லியா விலிருந்து கிடைத்துவந்துள்ள போதிலும் அதிலும் இப் பொழுது தடங்கல் ஏற்பட் டுள்ளது. இப்பொழுது யாழ். மாவட்டத்திலுள்ள 28 மின் தறி நிலையங்களிலிருந்தும் பெறப்படும் நூலைக்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில உற்பத்தி மேற்கொள்ளப்படு கின்றது.

## மார்புநோய்வைத்தியசாலை வடக்கு கிழக்கில் இல்லை

(செ. த. மை)

சிறிலங்கா இராணுவ நட வடிக்கை காரணமாக மூடப் பட்டுள்ள மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலைக்குப் பதிலாக வேறெந்த இடத்தி லும் அமைக்கப்படாதது குறி த்து மார்புநோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 75க்கும் மேற்ப ட்ட நோயாளர்கள் இப்பொ ழுது என்ன நிலையில் இருக் கிறார்களோ என்பது புரியாத புதிராக உள்ளது.

இந்தநோயாளர்கள் சம்பந்த மாக தகுந்த வைத்திய நட வடிக்கை எடுக்காவிட்டால் இந்தப் போர்க்கால சூழ் நிலையில் காசரோகம் மற்ற வர்களுக்கும் இலகுவில் தொ ற்றிவிடக்கூடும் என அஞ்சப் படுகிறது.

மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலையில் பணியாற் றிய டாக்டர் உட்பட 39ஊழி யர்களும் பரவலாக சகல ஆஸ் பத்திரிகளிலும் கடமையாற் றுகிறார்கள், ஆனால் இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற் றுவந்த நோயாளருக்கு இது வரை ஆஸ்பத்திரிகளில் தானும் இடம் ஒதுக்காதது சிறிலங்கா அரசாங்கத்தின தோ அல்லது வைத்திய அதி காரிகளினதோ மாற்றாந்தாய் மனப்பான்மையைக் காட்டுவ தாகக் கருதவேண்டியுள்ளது. மார்புநோயாளர்கள் குறைந் தது மூன்று மாதமாவது வார் டுகளில் தங்கியிருந்து தகுந்த சிகிச்சை பெறவேண்டும் என்று வைத்தியர் ஒருவர் தெரிவிக் கிறார் வடக்கு-கிழக்குப் பகு திகளுக்குப் பொதுவாக மயி லிட்டி மார்புநோய் வைத்திய சாலை ஒன்றுதான் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

### நிரந்தர

தலைவர் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளார்

மேலும் வட, கிழக்கில் இடம் பெற்று வரும் இரா ணுவத்தாக்குதல் மற்றும்சீர ற்றசூழ்நிலைகள் காரணமாக தெண்டர் ஆசிரியர்களின் வரவு விடயத்தில் கடந்த ஆண்டு மார்கழிமாதம் 31ஆம் திகதிவரை சேவை செய் தாலும் கூட நியமனத்திற் கான நேர்முகப் பரீட்சைக் கு தோற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## புத்தூரில் கொள்ளை

(செ. த. மை.)

17. 2. 91 இரவு புத்தூர் சந்தைக்கு அருகாமையில் உள்ள அ. பிரான்சிஸ் என்ப வரின் புடைவைக்கடைஉடைக் கப்பட்டு ஓர் இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் பெறு மதியான புடைவை வகை கொள்ளை யடிக்கப்பட்டுள் ளது. இதேஇரவு அருகில் உள்ள திரு. மாப்பாணரின் சாராயக்கடை உடைக்கப் பட்டு ரொக்கப்பணம் 500 ரூபாவும் இரண்டு போத்தல் சாராயமும் கொள்ளையடிக் கப்பட்டுள்ளன.

### பிரபல வர்த்தகர்

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டார். இவரிடம் இருந்து இரண்டு கைத்துப் பாக்கிகளும், ரவைகளும் மீட் கப்பட்டன.

இத் துப்பாக்கிகள் அனேக மாக இந்திய இராணுவத்தின ரிடம் இருந்து பெற பட்ட தாக இருக்கலாம் எனச் சந் தேகிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக் கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.